**கவனிக்க** .- *23.05.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1865 - 2014 මැයි මස 30 වැනි සිකුරාදා - 2014.05.30

*1865 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 690 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | 691 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- *ரஞ்ஜித் சியம்பலாபிடிய சிநேகபூர்வ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014, மே 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2014, யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூன் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பன்னல பிரதேச சபை**

வீதிகளின் பெயர் மாற்றம் செய்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 198 ஆவது பிரிவின்படி பன்னல பிரதேச சபையின் யக்வில உப அலுவலக பிரிவுக்குட்பட்ட "லக்ஷ்மி ஜனவாசத்தின் துங்கல்பிடிய வீதி" எனும் பெயரில் பாவிக்கப்படும் வீதி, "சோமரத்ன அதிகாரி வீதி" எனும் பெயரில் பாவனைக்குட்படுத்துவதற்காகவும் லக்ஷ்மி ஜனவாச காணி "அதிகாரி புரம்" என்ற பெயரில் பாவனை செய்ய இந்த பிரதேச சபையின் 2013.10.29 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்தப் பொதுக் கூட்ட இலக்கம் 03/27 ஆகிய பிரேரணைப்படி வடமேல் மாகாண சபையின் உள்ளூராட்சி நிருவாகத்துக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மேலே குறிப்பிடப்பட்ட பாதை "சோமரத்ன அதிகாரி வீதியும்" மேலே குறிப்பிடப்பட்ட காணி "அதிகாரி புரம்" எனவும் 2014.01.20 ஆந் திகதியில் இருந்து பெயரிடப்பட்டுள்ளதாகவும் இங்கு அறிவிக்கின்றேன்.*

எல். எம். எஸ். கே. ரஞ்ஜித் லன்சகார,
தலைவர்,
பன்னல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பன்னல,
2014, மார்ச்சு 20.

5-776

---

**அறிவித்தல்**

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலச்சினையானது, மன்னார் நகரசபையின் 24.12.2013 ஆந் திகதி நடைபெற்ற சபை கூட்டத்தின்போது, எமது மன்னார் நகரசபைக்கான இலச்சினையாக, தீர்மான இல. 211/2.2013 இற்கு அமைவாக, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை அறிவிக்கின்றேன்.*

இலச்சினை

எக்ஸ். எல். றெனால்ட்,
செயலாளர்,
மன்னார் நகர சபை.

5-851

# துணை விதிகள்

## பெல்மதுளை பிரதேச சபை

துணைவிதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் பெல்மதுல்லை பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங் களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2014 மே 03.

### பெல்மதுளை பிரதேச சபையின் பொது நூலகங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான துணைவிதி

1. பெல்மதுளை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாழும் மக்களின் கல்வி அபிவிருத்தி, வாசிக்கும் விருப்பை மேம்படுத்தல், மக்களின் ஒழுக்கம் மற்றும் ஆளுமையை விருத்தி செய்தல் உல்லாச மற்றும் ஆக்கத் திறன்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக பல்வேறு வளங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மூலம் பொது நூலகச் சேவையை முறைப்படுத்தி நிருவகிப்பதற்காக பெல்முடுல்ல பிரதேச சபையினால் இத் துணை விதி விதிக்கப்படுகின்றது.

2. பெல்மதுளை பிரதேச சபையின் பொது நூலக அதிகாரப் பிரதேசத்தின் மக்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுள் சிலவற்றை அல்லது அவை அனைத்தையும் அடங்கியிருக்கும்:

   (i) இரவல் கொடுக்கும் பிரிவு ;
   (ii) உசாத்துணைப் பிரிவு ;
   (iii) சிறுவர் பிரிவு ;
   (iv) தவணைச் சஞ்சிகை மற்றும் செய்தித்தாள் பிரிவு ;
   (v) கற்கைப் பிரிவு;
   (vi) புத்தகப் பாதுகாப்புப் பிரிவு;
   (vii) நடமாடும் மற்றும் கிளை நூலகங்கள்;
   (viii) ஏனைய தகவற் சேவைகள்.

3. பெல்மதுளை பொது நூல் நிலையத்தில் நூலகப் பொறுப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு நியமனம் செய்யப்படும் நபர் பொது நூலகத்தின் அமைப்பு மற்றும் முகாமைத்துவத்தை முறைப்படியாகப் பேணிச் செல்லல் தொடர்பில் பிரதேச சபைக்குப் பொறுப்பு கூறல் வேண்டும்.

4. பொது நூலகத்தின் மேற்பார்வை மற்றும் பொது நிருவாகத்திற்காக (இதனகத்து இதன்பின் நூலகக் குழு என அறிமுகப்படுத்தப்படுகின்ற) நூலக ஆலோசனைக் குழுவொன்றிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

   (i) இக்குழு வருடந்தோறும் பிரதேச சபையினால் நியமனம் செய்யப்படும். அக்குழுவில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வர்கள் அடங்கியிருப்பார்கள்:-

   * பிரதேச சபையின் தவிசாளர்;
   * பிரதேச சபையின் அங்கத்தவர்களுள் தேர்ந் தெடுக்கப்படுகின்ற மூவருக்குக் கூடுதலாகாத எண்ணிக்கையான அங்கத்தவர்கள்;
   * பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மக்கள் பின்பற்றும் சமயங்கள் பிரதிநிதித்துவமாகும் வகையில் ஒவ்வொரு சமயத்தின் பேரிலும் ஒரு பிரதிநிதி வீதம்;
   * பிரதேச சபையினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கும் மூவருக்குக் கூடுதலாகாத எண்ணிக்கையான சிறப்புமிக்கவர்கள்;
   * பிரதேச சபையின் செயலாளர்;
   * பிரதேச சபையின் சனசமூக தொடர்பு உத்தியோகத்தர்;
   * பிரதேச சபையின் பிரதான நூலகத்தின் நூலகப் பொறுப்பாளர்;
   * அதிகாரப் பிரதேசத்தின் பாடசாலை அதிபர் ஒருவர்;
   * அதிகாரப் பிரதேசத்தின் சனசமூகக் குழுவொன்றின் பிரதிநிதியொருவர்.

   (ii) பிரதேச சபையின் தவிசாளர் உத்தியோகபூர்வ அதி காரத்தின் மூலம் குழுவின் தவிசாளராவதுடன் அவர் அனைத்துக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்தல் வேண்டும். ஏதாவதொரு கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிகாதிருக்கும் சந்தர்ப்பமொன்றில் கூட்டத்திற்குச் சமுகமளித்திருக்கும் குழுவின் அங்கத்தவர்களுள் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர் ஒருவர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்;

   (iii) பிரதேச சபையின் செயலாளர் குழுவின் அழைப்பாளர் ஆதல் வேண்டும்;

   (iv) பிரதேச சபையின் பிரதான நூலகத்தின் நூலகப் பொறுப்பாளர் குழுவின் செயலாளராதல் வேண்டும்;

(v) குழுவின் நிறைவெண் (கூட்ட நடப்பெண்) அங்கத்தவர் எண்ணிக்கையின் 1/3 பங்காக இருத்தல் வேண்டும்;

(vi) ஏதாவதொரு கூட்டத்திற்கு தலைமை வகிப்பவருக்கு ஓர் அடிப்படை வாக்கும் ஏதேனுமொரு பிரச்சினை தொடர்பில் ஆதரவாகவும் எதிராகவும் கிடைக்கும் வாக்குகள் சமனாகவிருந்தால் தீர்மான வாக்கொன்றும் அவருக்கும் இருக்கும்.

**5. அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல்**

(i) நூலகச் சேவைகளை எதிர்ப்பார்க்கும் அனைவரும் சபையினால் காலத்திற்குக் காலம் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுதல் மூலம் விதிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்தி நூலகப் பொறுப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் விண்ணப்பமொன்றின் மூலம் அங்கத்துவத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்விண்ணப்பத்தை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வர்களுள் ஒருவர் அத்தாட்சிப்படுத்தியிருத்தல் வேண்டும்:-

* வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர்;
* சமாதான நீதவான்;
* பிரதேச சபையின் ஓர் உறுப்பினர்;
* அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர்;
* பாடசாலை விண்ணப்பதாரி ஒருவராயின் வகுப் பாசிரியரின்/பாடசாலை அதிபரின் சான்றிதழ்.

(ii) நூலக அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

* சாதாரண அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வ தற்காக, பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வசிப்பவரொருவராக அல்லது சொத்துரிமை உடையவொருவராக இருத்தல்;
* பாடசாலை மாணவ, மாணவிகளின் அங்கத்து வத்திற்காக 5 வயதிலும் கூடிய அத்துடன் பிர தேசத்தின் பாடசாலையொன்றில் அல்லது பிரிவெனா ஒன்றில் கல்வி கற்கும் ஒருவராக இருத்தல்.

(iii) அங்கத்துவக் கட்டணம்.- சாதாரண அங்கத்தவரொரு வருக்காக வருடாந்த அங்கத்துவக் கட்டணம் 100 ரூபா ஆகும். வருடத்துக்கொருமுறை 30.00 ரூபா கட்டணம் செலுத்தி அதைப் புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

பாடசாலை அங்கத்தவர்களுக்காக அங்கத்துவக் கட்டணம் 50 ரூபா ஆகும். அத்துடன் வருடத்துக்கொருமுறை 15ரூபா கட்டணம் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறாயினும் அங்கத்துவக் கட்டணம் குழுவின் சிபாரிசுகளின்படி சபையினால் காலத்துக்குக் காலம் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுதல் மூலம் திருத்தப்படலாம். அதேபோன்று இரவல் கொடுக்கும் பிரிவைத் தவிர உசாத்துணைப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளை உபயோகிப்பதற்காக குழுவின் சிபாரி சுகளின்படி பெல்மடுல்ல பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று நூலகத்தின் அங்கத்தவர்கள் அல்லாதவர்களிடமிருந்து அறவிடப் படலாம்.

(iv) பிணைக்காரர்கள் : பாடசாலை அங்கத்தவர்களுக்குப் பிணையாளராக அவர்களது தாய்/தந்தை/பாதுகாவலர்/ பாடசாலை அதிபர்/வகுப்பாசிரியர் ஆகியோர்களுள் ஒருவராக இருத்தல் வேண்டும்.

சாதாரண அங்கத்தவர்களுக்குப் பிணையாளராக, வருடாந்தச் சம்பளம் பெறும் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையின் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பிரதேசத்தின் பிரபு ஒருவர்/குடும்பத்தின் ஏனையவொரு அங்கத்தவர்/வரி செலுத்துபவர் ஆகியோர்களுள் ஒருவராக இருத்தல் வேண்டும்:-

6. புத்தகங்களை இரவல் கொடுக்கும் நூலகமொன்றின் அங்கத்தவரொருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர மொன்றின் மூலம் ஒரு தடவையில் 2 புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அங்கத்தவரால் கொண்டு செல்லப் படும் ஒவ்வொரு புத்தகம் தொடர்பிலும் அவர் பொறுப்பு கூறல் வேண்டும்.

7. நூலகத்தின் அங்கத்தவர் ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்ட புத்தகமொன்று அதைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் நூலகப் பொறுப்பாளரிடம் மீள ஒப்படைக் கப்படுதல் வேண்டும்.

8. துணைவிதியின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 14 நாட்கள் கால எல்லைக்குள் ஏதாவதொரு புத்தகத்தை அங்கத்த வரொருவர் நூலகப் பொறுப்பாளரிடம் மீள் ஒப்படைக்காத சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகத்தை மீள ஒப்படைக்க வேண்டிய தினத்தை மீறிச் செல்லும் ஒவ்வொரு தினத்திற்காகவும் 2 ரூபா வீதமும், பாடசாலை அங்கத்தவர்களுக்காக 1 ரூபா வீதமும் தண்டப் பணத்தொகையாக அல்லது குழுவின் சிபாரிசு களின்படி சபையினால் காலத்துக்குக் காலம் பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுதல் மூலம் தீர்மானிக்கப்படும் ஏதாவதொரு பணத்தொகையை தண்டப் பணத்தொகையாக அங்கத்தவரிட மிருந்து அறவிட்டுக் கொள்ளப்படும்.

9. வெளியே கொடுக்கப்பட்ட புத்தகமொன்று 14 நாட்கள் கால எல்லையைக் கடந்து பின்பு 30 நாட்களுக்குள் மீள ஒப்படைப்பதை அங்கத்தவரொருவரால் புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகம் காணாமற்போனதாகக் கருதப்படும்.

10. அவ்வாறு புத்தகமொன்று காணாமற் போனதாகக் கருதப்படும் சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகத்தின் பெறுமதியும் அப் புத்தகத்தின் 25% வீதம் வரை திணைக்களக் கட்டணமொன்றும் துணைவிதியின் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப் பணமும் தொடர்புடைய அங்கத்தவரால் செலுத்தப்படல் வேண்டும்.

11. அங்கத்தவர் ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்ட புத்தகமொன்றிற்கு பங்கமேற்படுத்தப்படுதலோ அல்லது அதில் திரிபுபடுத்தப்படுதலோ கூடாது.

12. வெளியே எடுத்துச் செல்வதற்கு எதிர்ப்பார்க்கும் புத்தகமொன்றிற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பங்கம் அல்லது திரிபு தொடர்பில் நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிப்பது அனைத்து அங்கத்தவர்களினதும் கடமையாகும். அவ்வாறான பங்கத்தை அல்லது திரிபைப் பற்றி நூலகப் பொறுப்பாளருக்கு அறிவிப்பதை எவரேனுமொரு அங்கத்தவரால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில், அப்புத்தகம் பங்கம் அல்லது திரிபு ஏற்படுத்தப்படாத புத்தகமொன்றாக அங்கத்தவருக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

13. அங்கத்தவரொருவரால் மீள ஒப்படைக்கப்பட்ட புத்தகமொன்று திரும்பவும் விநியோகிப்பதற்குத் தகுதியற்ற நிலைக்கு அவர் அப்புத்தகத்திற்குப் பங்கமேற்படுத்தி அல்லது திரிபுபடுத்தியுள்ளமை பற்றி நூலகப் பொறுப்பாளர் திருப்தியடையும் சந்தர்ப்பமொன்றில் அப்புத்தகத்தை மீள கொள்வனவு செய்யும் செலவைச் செலுத்துவதற்கு அந்த அங்கத்தவர் கட்டுப்பட்டிருப்பார். அப்புத்தகம் மீளக் கொள்வனவு செய்து கொள்ளப்பட்ட பின்பு பங்கமேற்பட்ட புத்தகத்தில் “பங்கமேற்பட்ட புத்தகமொன்றாக விற்பனை செய்யப்பட்டது’என முத்திரையிட்டு அப்புத்தகம் அங்கத்தவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

14. (i) நூலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமொன்று எந்தவொரு அங்கத்தவராலும் பிறருரிமையாக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) மேலே 13 (1) ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறும் எந்தவொரு அங்கத்தவரினதும் அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும்.

15. பரவும் நோயொன்றினால் அல்லது தொடு நோயொன்றினால் பாதிக்கப்பட்டுள்ள எவரேனுமொரு நபரினால் உபயோகிக்கப்பட்டது என்பதை தான் அறிந்து கொண்ட எந்தவொரு புத்தகமும் அங்கத்தவரொருவரால் மீள ஒப்படைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

வெளியே எடுத்துச் செல்லப்பட்ட புத்தகமொன்று பரவு தொடு நோயொன்றினால் பாதிக்கப்பட்டுள்ள நபரொருவரால் உபயோகிக்கப்பட்டுள்ளவொரு சந்தர்ப்பத்தில் அப்புத்தகத்தை அழித்தொழித்து விடுதல் வேண்டும். அத்துடன் அப்புத்தகத்தை மீளக் கொள்வனவு செய்யும் செலவு அந்த அங்கத்தவரால் நூலகப் பொறுப்பாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

16. ஏதாவதொரு புத்தகத்தை எந்த அங்கத்தவருக்குக் கொடுத்தல் வேண்டும் என்பது பற்றிய கருத்து வேறுபாடொன்று இரு அங்கத்தவர்களுக்கிடையில் அல்லது அதனிலும் கூடிய எண்ணிக்கையான அங்கத்தவர்களுக்கிடையில் ஏற்படும் சந்தர்ப்பமொன்றில் அந்தக் கருத்து வேறுபாடு நூலகப் பொறுப்பாளரால் தீர்க்கப்படுதல் வேண்டும்.

17. இரவல் கொடுக்கப்படும் புத்தகமொன்று அங்கத்தவரொருவரால் கேட்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அது வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் ஏற்கனவே அப்புத்தகம் விநியோகிக்கப்பட்டிருந்தால், அப்புத்தகத்தை வேண்டியிருந்தவரின் அல்லது வேண்டியிருந்தவர்களின் பெயர்களை எதிர்ப்பார்ப்பு அட்டவணையில் குறிப்பிட்டு அப்புத்தகம் நூலகத்திற்குக் கிடைத்தபின்பு அந்தந்த அங்கத்தாவ்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் நூலகப் பொறுப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

18. புத்தகங்களை இரவல் கொடுக்கும் நூலகம் ஞாயிற்றுக்கிழமை, பொது விடுமுறை நாட்கள் மற்றும் ஆகக் குறைந்தது 7 நாட்களுக்கு முன் அங்கத்தவர்களுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்ட பின்பு தொகைகளைக் கணக்கெடுப்பதற்காக குழுவினால் தீர்மானிக்கப்படும் நாட்கள் தவிர்ந்த தினந்தோறும் முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரையிலான கால எல்லைக்குள் திறந்து வைக்கப்படும். அவ்வாறாயினும் சபையின் கருத்தின்படி நூலகத்தைத் திறந்து வைக்கும் நேரங்கள் மற்றும் நாட்கள் தீர்மானிக்கப்படலாம்.

19. **உசாத்துணைப் பிரிவு**

* நூலகப் பொறுப்பாளரின் அனுதியுடன் விமர்சனப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள அட்டவணையில் கையொப்பமிட்டு உசாத்துணைப் புத்தகங்களை உபயோகிக்கலாம்.

* வாசிப்பதற்காக தம்மிடம் வழங்கப்பட்ட நூலகத்தின் எந்தவொரு புத்தகத்தையோ அல்லது சஞ்சிகையையோ அல்லது வேறு ஏதாவதொன்றையோ உசாத்துணைப் பிரிவிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படாதிருத்தல் வேண்டும். அவ்வாயினும் நிழற்படப் பிரதியெடுத்தற் சேவையொன்று செயற்படுமாயின் நூலகப் பொறுப்பாளரின் அனுமதியுடனும் பொறுப்புடனும் அந்த வெளியீட்டின் தேவையான பக்கங்களை குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி நிழற்படப் பிரதிகளைக் கேட்கும் நபர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளை அளிக்கப்படுதல் வேண்டும்.

20. **வாசிகசாலை**

* வாரத்தின் எல்லா நாட்களிலும் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரை அல்லது சபையினால் தீர்மானிக்கப்படும் நாட்களிலும் நேரங்களிலும் திறந்து வைக்கப்படும். வாசிகசாலை எந்தவொருவராலும் உபயோகிக்கப்படலாம். அதற்காக வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ள இடாப்பில் பெயரையும் வந்த நேரத்தையும் குறிப்பிட்டு, கையொப்பமிட்டு வாசிகசாலையின் சேவைகளைப் பெறுதல் வேண்டும்.

* வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிக சாலைக்குச் சொந்தமான எந்தவொரு செய்தித் தாளுக்கு, பருவ வெளியீடொன்றுக்கு அல்லது நூலகத்தின் ஏனைய ஏதாவதொரு சொத்துக்கும் பங்கம் ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும்.

21. **எவரும்**

* பொது நூலகத்திற்குள் அல்லது அதன் சுற்றாடலில் ஒழுங்கீனமான முறையில் நடந்து கொள்வதோ அல்லது ஏனையோர்களுக்கு இடையூறுகளை ஏற்படுதலோ கூடாது.

* நூலகத்திற்கு அல்லது அதற்கு அண்மையிலுள்ள பிரதேச சபையின் ஏதாவதொரு கட்டடத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு அல்லது ஏதாவதொரு ஆதனத்திற்கு நட்ட மேற்படுத்தல் அல்லது அவற்றில் ஏதாவதொரு வகையில் திரிபுகளை ஏற்படுத்தல் என்பன செய்யப்படாதிருத்தல் வேண்டும்.

* நூலக நேரத்தின் பின்பு மேற்கூறிய நூலகச் சுற்றாடலில் மதுபானம் அருந்துதல், புகைபிடித்தல் அல்லது துப்புதல் என்பன கூடாது.

* நூலகச் சுற்றாடலில் தாதுக்கட்டைகளைக் கொண்டு அல்லது சீட்டுக்கட்டுகளைக் கொண்டு சூது விளையாட்டில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

* நூலகத்தில் சப்தமிடுதல், பாட்டுக்களைப் பாடுதல், ஏனைய சப்தங்களை ஏற்படுத்தல் ஆகிய செயல்கள் மூலமும் கையடக்கத் தொலைபேசிகளை உபயோகிப்பதன் மூலமும் ஏனையோர்களுக்கு தடைகளை ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும்.

* அசுத்தமான நிலையில் பொது நூலகத்திற்கு உட் பிரவேசிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

* நூலகத்திற்குள் நித்திரை கொள்வதோ அல்லது நூலகத்திற்குள் வைத்து உணவுகளை உட்கொள்வதோ கூடாது.

* நூலகப் பொறுப்பாளருக்கு அல்லது நூலகப் பொறுப் பாளரின் பணிப்பின்படி செயலாற்றும் ஏனைய வொரு நபருக்கு இத்துணைவிதியின் கீழ் அவரது அதிகாரங்களை சட்டரீதியான முறையில் செயற்படுத்தும் போது அதற்குத் தடைகளை ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும்.

22. பரவுகின்ற ஏதேனும் தொடுநோயொன்றினால் அல்லது தோல் நோயொன்றினால் பீடிக்கப்படுகின்ற அல்லது அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த அல்லது அந்நோயொன்றினால் பீடிக் எகப்பட்ட ஒருவரை அண்மையில் கவனித்துப் பராமரித்த ஒருவர் தொற்று நோய் பரவும் காலஎல்லை முடிவடையும் ரை நூலகத்திற்கு உட்பிரவேசிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

23. இத்துணைவிதி தொடர்பிலான ஒவ்வொரு மீறுகையும் குற்றமொன்றாவதுடன் இக்குற்றத்தைச் செய்யும் நபரொருவர் தகுந்த அதிகாரமுடைய நீதிமன்றமொன்றினால் குற்ற வாளியாக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவினால் விதிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்தொகை யொன்றைச் செலுத்துவதற்கும், தொடர்ந்தும் அக்குற்றம் செய்து கொண்டு செல்லப்படுமாயின் மேற்படி மீறுகை தொடர்பில் அவதானம் செலுத்தி பிரதேச சபையின் தவிசாளரால் அல்லது செயலாளரால் அல்லது தவிசாளரால் அதிகாரமளிக்கப்படும் ஏனையவொரு உத்தியோகத்தரால் எழுத்துமூலமான அறிவித்தலொன்று கையளிக்கப்பட்ட பின்பும் அக்குற்றம் செய்யப்படுமாயின் அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு தினத்திற்காகவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிகத் தண்டப் பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்கும் ஆளாக்கப்படும்.

24. சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இத்துணைவிதியின் விவகாரங்களுக்காக தவிசாளர் என்பது பெல்மடுல்ல பிரதேச சபையின் தவிசாளரையும் செயலாளர் என்பது பெல்மடுல்ல பிரதேச சபையின் செயலாளரையும் நூலகப் பொறுப்பாளர் என்பது சப்பிரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நூலகச் சேவைக்கு உட்பட்ட பிரதேச சபையின் பொது நூலகத்திற்குப் பொறுப்பாக கடமை புரியும் பிரதான உத்தியோகத்தரை அல்லது அப்பதவியில் கடமை புரிவதற்காக ஈடுபடுத்தியுள்ள ஏனைய எந்தவொரு உத்தியோகத்தரையும் பொருட்படுத்தும்.

நூலகப் பொருட்கள் என்பது எழுத்து மூலமான, அச்சிடப்பட்ட, ஒலி, ஒளி ஊடக மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பொருட்படுத்தும்.

25. இத்துணைவிதிகளுள் ஏதாவதொரு துணைவிதியில் சொற்கள் தொடர்பில் ஏதாவது ஒவ்வாமை ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்களப் பிரதியே மேலோங்கி செயற்படல் வேண்டும்.

**பெல்மதுளை பிரதேச சபை**

துணைவிதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் பெல்மடுல்லை பிரதேச சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி,*
*2014 மே 03.*

**பெல்மதுளை பிரதேச சபை**

***பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடங்களை அமைத்தல் மற்றும் வாகனங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைவிதி***

*1. இத்துணைவிதி பெல்மதுளை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடங்களை அமைத்தல் மற்றும் அவ்விடங்களில் வாகனங்களை நிறுத்தி வைத்தல் தொடர்பில் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் வாகனங்கள் நிறுத்தி வைத்தலைக் கட்டுப்படுத்தல் தொடர்பான துணைவிதி என அறிமுகப்படுத்தப்படும்.*

*2. இத்துணைவிதி பெல்மதுளை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடங்களை அமைத்தல், வாகனங்களை நிறுத்தி வைத்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பாக விதிக்கப்படுகின்றது.*

*3. இதனகத்து இதன்பின் தவிசாளர் என அறிமுகப்படுத்தப்படுகின்ற பெல்மதுளை பிரதேச சபையின் தவிசாளரால், அதிகாரப் பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்தி வைத்தல் அல்லது நிறுத்தி வைத்தலைத் தடை செய்தல் அல்லது எல்லைப்படுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் தொடர்பில் ஏதாவதொரு வீதியில் அல்லது வீதியொன்றின் ஒருபகுதியில் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களை நிறுத்தும் ஏதாவதொரு இடத்தைக் குறிப்பிடும் அறிவித்தலொன்று அவ்வீதியில் அல்லது அவ்வீதியின் ஒருபகுதியில் பிரசித்தமானவோர் இடத்தில் காணக்கூடியவாறு காட்சியளிக்கச் செய்யப்படுதல் வேண்டும்.*

*4. 3 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள அறிவித்தலொன்றின் மூலம் வாகனங்களை நிறுத்தி வைத்தலை அல்லது நிறுத்தி வைத்தலைத் தடை செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் வாகனமொன்றின் சாரதியினால்-*

*(அ) எவரேனுமொரு உத்தியோகத்தரால் அல்லது அதிகாரியினால் அவ்வீதியின் அல்லது அவ்வீதியின் ஒருபகுதியில் அமைக்கப்பட்டுள்ள அல்லது காட்சியளிக்கச் செய்யப்பட்டுள்ள ஏதாவதொரு தெருக் குறியீட்டின் அறிவித்தலொன்றின்படி செயற்படுகையில் அல்லது,*

*(ஆ) அவ்வீதியில் அல்லது அதன் ஒரு பகுதியில் அச்சந்தர்ப்பத்தில் நடைமுறையிலுள்ள வாகனப் போக்குவரத்து முறைகளை முறைப்படி பின்பற்றுகையில் அல்லது,*

*(இ) அவ்வாகனங்களுக்குப் பொருட்களை ஏற்றும் அல்லது அவ்வாகனத்திலிருந்து பொருட்களை இறக்கும் பணிகளைச் செய்கையில் தேவைக்கேற்ற காலத்தைத் தவிர அந்த வாகனம் வீதியில் அல்லது அந்த வீதியின் ஒரு பகுதியில் நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.*

*5. இத்துணைவிதியின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்பு தவிசாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப் பத்திரமொன்று தன் உடைமையில் இருந்தால் மட்டுமேயன்றி எந்தவொரு நபரினாலும் இத்துணைவிதியின் 3 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.*

*6. இத்துணைவிதியின் மூன்றாம் அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்குமிடங்கள் இடைக்கிடையே சபையினால் திருத்தப்பட்டு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதற்கான அதிகாரம் இருக்கும். 5 ஆம் துணைவிதியின்கீழ்*

வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்திற்காகவும் சபையினால் பிரேரணை அங்கீகரிக்கப்படுதல் மூலம் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுதல் மூலம் காலத்துக்குக் காலம் திருத்தப்படுவதற்கு இணங்க இங்கு 1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப்படுதல் வேண்டும்.

7. அரசாங்கத் திணைக்களமொன்றினால் அல்லது கூட்டுத்தாபனமொன்றினால் அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்றினால், சபையினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படுகின்ற மாதாந்தக் கட்டணங்களை சபைக்குச் செலுத்துவதன் மூலம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அத்திணைக்களத்திற்கு, ஆட்கள் குழுவிற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்காக மாதாந்த அல்லது வருடாந்த அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

8. இத்துணை விதியின்கீழ் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் அந்த அனுமதிப்பத்திரம் எந்த மோட்டார் வாகனம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அந்த மோட்டார் வாகனத்தில் அறிமுக இலக்கத்தைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அந்த அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலஎல்லைக்காக மாத்திரம் அது செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

9. இத்துணை விதியின்கீழ் அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளும் எந்தவொருவரும் அந்த அனுமதிப்பத்திரம் வாகனத்திலிருந்து வெளியே காணக்கூடியவாறு வாகனத்திற்குள் தெளிவானவோர் இடத்தில் காட்சியளிக்கச் செய்தல் வேண்டும்.

10. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது மோட்டார் வாகனக் கட்டுப்பாட்டாளர் ஒருவரால், வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வாகனத்தின் உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம் அம்மோட்டார் வாகனம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் சோதிப்பதற்காகச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த அனுமதிப் பத்திரம் அந்த உரிமையாளரால் அல்லது சாரதியினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11. வாகனங்களை நிறுத்தி வைக்கும் ஏதாவதொரு பொது இடத்தில், நிச்சயிக்கப்பட்ட ஏதாவதொரு வகுப்பிற்கு அல்லது வர்க்கத்திற்கு உட்பட்ட மோட்டார் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளவொரு சந்தர்ப்பத்தில் எந்தவொருவராலும் இந்த வகுப்பிற்கு அல்லது வர்க்கத்திற்கு உட்படாத மோட்டார் வாகனமொன்று அவ்விடத்தில் நிறுத்தி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

12. வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றிற்கு உட்பிரவேசிக்கும் அல்லது அவ்விடத்திலிருந்து வெளியேறும் ஏனையவொரு மோட்டார் வாகனத்திற்கு தடைகள் ஏற்படும் வகையில் எந்தவொருவராலும் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் மோட்டார் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

13. வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான பொது இடமொன்றில், அதில் உட்பிரவேசிப்பதற்கும் அதிலிருந்து வெளியேறுவதற்கும் வெவ்வேறான வழிகளை ஏற்படுத்தி அதைப்பற்றிய அறிவித்தலொன்றின் மூலம் அல்லது குறியீட்டுப் பலகையொன்றின் மூலம் காட்டப்பட்டுள்ளவொரு சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட ஏற்புடைய வழியூடாகவே தவிர எந்தவொரு மோட்டார் வாகனமும் அவ்விடத்திற்கு உட்பிரவேசித்தலோ அவ்விடத்திலிருந்து வெளியேறுதலோ கூடாது.

14. சங்கிலிகள் அல்லது தூண்கள் அல்லது சங்கிலிகள் மற்றும் தூண்கள் ஆகிய இரு வகைகளும் வழங்கப்பட்டுள்ளவொரு பொது நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்ற எல்லா மோட்டார் வாகனங்களும், அம்மோட்டார் வாகனங்கள் வந்த தொடர் அடிப்படையில் ஒன்றன்பின் ஒன்றாக பிற்பக்கமாக ஒரே திசைநோக்கி நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் முற்பக்கமாக வெற்றிடங்கள் ஏற்படும் தொடர் அடிப்படையில் தொடர்ச்சியாக அவ்வாகனங்களை முன்னே எடுத்து வருதல் வேண்டும்.

15. மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் மோட்டார் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவொரு சந்தர்ப்பத்தில் எந்தவொருவராலும் அந்த வாகனம் கழுவப்படுதலோ கழுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுதலோ கூடாது.

16. வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றிலிருந்து வாகனங்களை நீக்கிக் கொள்ளும் பணிக்காகப் பழுதுபார்த்தலொன்று தேவைப்பட்டால் மாத்திரமேயன்றி வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் நிறுத்தப்பட்டுள்ள வாகனமொன்றில் எத்தகையவொரு பழுதுபார்த்தலும் எந்தவொருவராலும் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

17. இத்துணை விதி ஒவ்வொரு தினத்திலும் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரையிலான கால எல்லைக்குள் மாத்திரம் செயற்படுதல் வேண்டும். இக்கால எல்லை தவிசாளரால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலொன்றின் மூலம் திருத்தப்படலாம்.

18. தவிசாளரால் எழுத்து மூலமாக இடப்படும் பணிப்பொன்றின் மூலம் நிச்சயிக்கப்பட்ட ஏதாவதொரு ஆட்கள் வகுப்பு குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படலாம்.

19. இத்துணை விதிகளுள் எதனையும் மீறும் எவனுமொருவர் குற்றமொன்றைப் புரிவதுடன் அந்த நபர் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அந்நபர், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப் பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாக்கப்படுவதுடன் அக்குற்றம் தொடர்ந்தும் செய்து கொண்டு செல்லும் சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு தினத்திற்காகவும் பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டப் பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்கும் ஆளாக்கப்படும்.

20. சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இத்துணை விதியில் ''தவிசாளர்'' என்னும் சொல் பெல்மதுளை பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும்.

21. "பொலிஸ் உத்தியோகத்தர்" என்னும் சொற்கள் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரெனப் பொருள்படும்.

22. "வாகனக் கட்டுப்பாட்டாளர்" என்னும் சொற்கள், வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக தவிசாளருக்குப் பதிலாக அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்காக தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரெனப் பொருள்படும்.

23. ஏனையவொரு விசேட கருமத்திற்காக நிரந்தர வாடகை வண்டிகளை நிறுத்தி வைத்துள்ள இடங்களை உபயோகித்தல் அல்லது தவிசாளரால் வழங்கப்படும் விசேட அனுமதிப் பத்திரமொன்றின்படி விசேட சந்தர்ப்பங்களில் ஏனைய பணிகளுக்காக மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பது சட்டரீதியானதாகும்.

24. குறிப்பிட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து வருடாந்த அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஏற்புடைய ஆண்டின் முதல் மாதம் செல்வதற்குமுன் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறிப்பிட்ட கட்டணங்கள் செலுத்தப்படுவதன் மூலம் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

**1 ஆம் அட்டவணை**

| | | முதலாவது ஒரு மணித்தியாலத்துக்காக அல்லது அதன் ஒரு பகுதிக்காக கட்டணம் | முதலாவது ஒரு மணித்தியாலத்திலும் கூடிய, ஆனால் 4 மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஒவ்வொரு மேலதிக மணித்தியாலத் துக்காக அல்லது அதன் ஒரு பகுதிக்காக கட்டணம் | 4 மணித்தியாலத்துக்கு கூடுதலாகும் ஒவ்வொரு மணித்தியாலத்துக் காக அல்லது அதன் ஒரு பகுதிக்காக கட்டணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| (அ) | மோட்டார் சைக்கில் ஒன்றுக்காக | இல்லை | இல்லை | இல்லை |
| (ஆ) | மோட்டார் வண்டியொன்றிற்காக அல்லது மோட்டார் கோச் வண்டியொன்றிற்காக | 20 0 | 10 0 | 10 0 |
| (இ) | டிரெய்லர் ஒன்றுடனான டிரக்டர் ஒன்றுக்காக அல்லது லொரி வண்டியொன்றிற்காக | 30 0 | 10 0 | 10 0 |
| (ஈ) | டிரெய்லர் இல்லாத டிரக்டர் ஒன்றுக்காக | 20 0 | 10 0 | 10 0 |
| (உ) | பஸ் வண்டி ஒன்றுக்காக | 30 0 | 10 0 | 10 0 |

**2 ஆம் அட்டவணை**

| | | மாதமொன்றுக்கு ரூபா ச. |
|---|---|---|
| (அ) | முச்சக்கர வண்டியொன்றுக்காக மாதமொன்றுக்கு | 150 0 |
| (ஆ) | மோட்டார் வண்டி அல்லது வேன் வண்டியொன்றுக்காக மாதமொன்றுக்கு | |
| | (i) டீசல் உபயோகிக்கும் வாகனமொன்றாயின் | 200 0 |
| | (ii) பெற்றோல் வாயு உபயோகிக்கும் வாகனமொன்றாயின் | 200 0 |
| | (iii) சிறிய லொரி வண்டியொன்றாயின் மாதமொன்றுக்கு | 250 0 |
| (இ) | டிரெய்லர் ஒன்றுடனான அல்லது டிரெய்லர் இல்லாத வண்டியொன்றுக்காக மாதமொன்றுக்கு | 200 0 |
| (ஈ) | பஸ் வண்டிக்காக மாதாந்தம் | 250 0 |

**3 ஆம் அட்டவணை**

**வாகனம் நிறுத்தி வைக்குமிடங்கள்**

(1) பெல்மதுளை பஸ் நிலையத்திற்கு முற்பக்கமாக

(2) பெல்மதுளை செலான் வங்கிக்கு முற்பக்கமாக

(3) பெல்மதுளை பலங்கொட வீதி அரச மரத்தடியில்

(4) பெல்மதுளை ரக்வான வீதி அரச மரத்தடியில்

(5) பெல்மதுளை கூட்டுறவு கட்டடத்துக்கு முற்பக்கமாக

(6) குட்டாபிட்டிய வித்தியால மாவத்தைக்கு அருகே

(7) பெல்மதுளை கூட்டுறவு எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கருகே

(8) பெல்மதுளை மாலிங்க எண்டபிரைஸஸ் அருகே

(9) பெல்மதுளை பட்டலந்த மேடு

(10) வெலிஹிந்த சந்தி

(11) பனாவென்ன சந்தி

(12) கெட்டேதென்ன பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பும் சந்தி மற்றும் கோயில் சந்தி

(13) கஹவத்த பயிர்ச்செய்கைக் கம்பனிக்குச் செல்லும் பாதைக்கருகே

(14) கஹவத்த இளைஞர் சந்தைக்கருகே

(15) பொரோணுவ பாதைக்கருகே

(16) பத்கம்கொட சந்திக்கருகே

(17) மீகஹகொட சந்தி

(18) போரால சந்தி

(19) நீலகம சந்தி

(20) கனேகம சந்தி

(21) மிதிகஹமுல்ல சந்தி

(22) பாத்தகட சந்தி

(23) கிரிவெல்தெனிய சந்தி

(24) சன்னஸ்கம பாலுகம்பல சந்தி

(25) கல்லின்ன சந்தி

(26) லெல்லோபிட்டிய சந்தி

(27) லெல்லோபிட்டிய மேடு (ராகுல வித்தியாலத்துக்கு முற்பக்கமாக)

(28) கோணகும்புர சந்தி

(29) மாரபன சேற்றுச் சந்தி

(30) மாரபன உப அலுவலகத்துக்கு அருகே

(31) புலுகஹதென்ன வித்தியாலயத்துக்கு அருகே

(32) பனகம சந்தி

(33) ஹப்புருகல சந்தி

(34) அலுபொத்த சந்தி

(35) இஹல ஹக்கமுவ கடைத்தெருவுக்கு அருகே

(36) பெரெண்டுவ கடைத்தெருவுக்கு அருகே

## திருத்தம்

### வரக்காபொல பிரதேச சபை

தகனம் செய்யுமிடமொன்றினை நடாத்துதல் சம்பந்தமான துணைச் சட்டத்தினை திருத்தம் செய்தல்

வரகாபொல பிரதேச சபையினால் 2008.07.18 ஆந் திகதி வெளியிடப்பட்ட IV (அ) பகுதி வர்த்தமானப் பத்திரிகையில் தகனம் செய்யுமிடத்தினை கொண்டு நடாத்துதல் சம்பந்தமான துணைச்சட்டத்தில் 1352 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 3 ஆம் பிரிவில் 1 ஆம் இலக்க உப பிரிவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது:-

1. இறப்பினைப் பதிவு செய்த பதிவாளரினால் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழை அல்லது பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு சட்டத்தின் (41 (1) (அ) பிரிவின்) படி B 16 படிவத்திற்கேற்ப வழங்கப்பட்ட மரண அறிவித்தல் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.

கே. விஜேதுங்க,
தவிசாளர்,
வரகாபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வரகாபொல,
2014 மே 12.

5-854